Ontario

உடல்நல அமைச்சு

# சமூக சனத்தொகை தகவலை சேகரிக்கவும், அதை உபயோகிக்கவும் வெளிப்படுத்தவும் சம்மதம் பெறுதல்

கோவிட்-19 தடுப்பூசியை எடுக்கும் மக்களிடமிருந்து சமூக சனத்தொகை தகவலை உடல்நல அமைச்சு சேகரிக்கின்றது. இது அவர்களின் இனம், நாடு, வருமானம், குடும்பத்தின் எண்ணிக்கை, மொழி போன்றவற்றை உட்படுத்தும்.

அமைச்சிற்கு நீங்கள் இந்த தகவலை வழங்குவதற்கு தீர்மானித்தால், ஒன்டாரியோவில் தடுப்பூசி எப்படி விநியோகிக்கப்படுகிறது மற்றும் ஊக்குவிக்கப்படுகிறது என்பதை திட்டமிடுவதற்கும், சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட வேறு நோக்கத்திற்காகவும் அமைச்சு இதை பயன்படுத்தும் மற்றும் வெளிப்படுத்தும்.

பொதுமக்களுக்கு கிடைக்கக்கூடிய அறிக்கைகளை தயாரிப்பதற்கு அமைச்சு இத் தகவலை உபயோகிக்கும். உங்களை அடையாளம் காட்டக்கூடிய தகவல் இந்த அறிக்கைகளில் இருக்காது. பொறுப்போடும் மக்களின் அந்தரங்கத்தை மதிக்கும் வகையிலும் இந்த தகவல் பயன்படுத்தப்படும் என்பதை அமைச்சு உறுதிப்படுத்தும்.

நீங்கள் வழங்கும் தகவல்கள் கோவக்ஸ் சிஸ்டத்தில் சேமித்து வைக்கப்பட்டு உடல்நல பராமரிப்பு வழங்குபவர்களுக்கும், தடுப்பூசி கிளினிக்குகளுக்கும் கிடைக்கப்பெறும். கோவக்ஸ் என்பது அமைச்சின் பாதுகாப்பிலும் கட்டுப்பாட்டிலும் இருக்கும் ஒரு உடல்நல அறிக்கை அமைப்பு முறையாகும்.

**இந்த தகவலை வழங்குவது உங்கள் விருப்பம்.**

உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால் இத்தகவலை நீங்கள் வழங்கத் தேவையில்லை. நீங்கள் இதற்கு சம்மதம் தெரிவிக்காவிட்டாலும் கோவிட்-19 தடுப்பூசியும் அல்லது மற்ற சேவைகளும் உங்களுக்கு வழங்கப்படும். கேள்விகள் அனைத்திற்குமோ அல்லது சிலவற்றிற்கோ நீங்கள் பதில் வழங்கலாம். அல்லது ஒன்றிற்குமே பதில் வழங்காமல் விடலாம்.

உங்கள் தகவலை வழங்கிவிட்டு, எதிர்காலத்தில் அவை பயன்படுத்தும் முறைகுறித்து உங்கள் மனதை மாற்றினால், அமைச்சை நீங்கள் தொடர்புகொண்டு, உங்கள் சமூக சனத்தொகை தகவலை பயன்படுத்தவோ வெளியிடவோ வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளலாம்.

அமைச்சின் ConsentWD@ontario.ca இற்கு ஈமெயில் அனுப்புவதன் மூலம் நீங்கள் இதை செய்யலாம்.

அமைச்சிற்கு உங்கள் தகவலை வழங்க நீங்கள் சம்மதிக்கின்றீர்களா?

☐ **மேலே விவரிக்கப்பட்ட நோக்கங்களுக்காக எனது சமூகசனத்தொகை தகவலை வழங்க நான் சம்மதிக்கிறேன்.**

| | |
|---|---|
| **உங்கள் இன அல்லது கலாச்சார பின்னனி(கள்) எது?**<br>உதாரணங்கள்: கனேடியர், சைனீஸ், கிழக்கு இந்தியர், ஆங்கிலேயர், இத்தாலியர், பிலிப்பீனோ, ஸ்கொட்டிஷ், ஐரிஷ், போத்துகீஸ், ஜேர்மன், போலிஷ், டச், பிரெஞ்ச், ஜமேய்க்கர், பாக்கிஸ்தானியர், ஈரானியர், இலங்கையர், கொரியர், உக்கிரேனியர், லெபனீஸ், கயானியர், சோமாலி, கொலம்பியர், யூதர், போன்றவை. | |
| **எது உங்களை சரியாக விவரிக்கிறது?** பொருந்துகிற அனைத்தையும் தெரிவுசெய்யுங்கள். | |
| **இன வகை** | **விவரிப்பு/உதாரணங்கள்** |
| ☐ கருப்பு | ஆபிரிக்கா, ஆபிரிக்க – கரீபியன், ஆபிரிக்க-கனேடிய வழிவந்தவர் |
| ☐ கிழக்கு ஆசியர் | சீனா, கொரியா, ஜப்பான், தாய்வான் வழிவந்தவர் |
| ☐ தென்கிழக்கு ஆசியர் | பிலிப்பீன்ஸ், வியட்னாம், கம்போடியா, தாய், இந்தோனேசியா, வேறு தென்கிழக்காசிய வழிவந்தவர் |
| ☐ லத்தீன் | லத்தீன் அமெரிக்கா, இஸ்பானிய வழிவந்தவர் |
| ☐ மத்திய கிழக்கைச் சேர்ந்தவர் | அரேபியா, பர்சியா, மேற்காசிய வழிவந்தவர், உதா. அப்கானிஸ்தான், எகிப்து, ஈரான், லெபனான், துருக்கி, கர்டிஷ், போன்றவர்கள். |
| ☐ கிழக்காசியாவைச் சேர்ந்தவர் | கிழக்காசிய வழிவந்தவர், உதா. கிழக்கிந்தியா, பாக்கிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, இன்டோ-கரீபியன், போன்றவர்கள். |
| ☐ வெள்ளை | ஐரோப்பிய வழிவந்தவர் |
| ☐ வேறு இன வகை | ஐரோப்பிய வழிவந்தவர் |
| **வரியை கழிக்கமுன் உங்கள் கடந்த வருட மொத்த குடும்ப வருமானம் என்ன?** ஒன்றைத் தெரிவு செய்யுங்கள். | ☐ $0-$29,999<br>☐ $30,000 - $49,999<br>☐ $50,000 - $69,999<br>☐ $70,000 - $99,999<br>☐ $100,000 - $149,999<br>☐ $150,000 அல்லது அதிகம்<br>☐ தெரியாது<br>☐ பதிலளிக்க விரும்பவில்லை |
| **நீங்கள் உட்பட, உங்கள் வீட்டில் எத்தனைபேர் தொடர்ந்து வசிக்கிறார்கள்?** | ☐ 1 ☐ 2 ☐ 3 ☐ 4 ☐ 5 ☐ 6 வேறு:<br>☐ தெரியாது<br>☐ பதிலளிக்க விரும்பவில்லை |
| **குழந்தைப் பருவத்தில் நீங்கள் வீட்டில் முதலாவதாக கற்றுக்கொண்டு, இப்போதும் புரிந்துகொள்ளும் மொழி எது?** தயவுசெய்து குறிப்பாக எதுவென்று சொல்லுங்கள்: | |
| **கனேடிய அதிகாரபூர்வ மொழிகளில், ஆங்கிலம் அல்லது பிரெஞ்சில் எது உங்களுக்கு நன்றாகத் தெரியும்?** | ☐ பிரெஞ்ச்<br>☐ ஆங்கிலம்<br>☐ ஆங்கிலம் மற்றும் பிரெஞ்ச்<br>☐ தெரியாது<br>☐ எதுவுமில்லை<br>☐ பதிலளிக்க விரும்பவில்லை |